செ.வெ.எண்.54 நாள்.31.01.2018

**காஞ்சிபுரம் மாவட்ட பள்ளி மாணவ மாணவியருக்கான**

**கலைப் போட்டிகள் அறிவிப்பு**

தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் சார்பில் மாவட்டக் கலைப்போட்டிகள், காஞ்சிபுரம் மாவட்ட அரசு இசைப்பள்ளி வளாகத்தில் 05.02.2018 திங்கள் கிழமை அன்று நடைபெற உள்ளது. இப் போட்டிகள் குரலிசை, பரத நாட்டியம், நாட்டுப்புற நடனம், ஓவியம் ஆகிய பிரிவுகளில் நடைபெறுகிறது. குரலிசை, பரதநாட்டியப் போட்டிகள் காலை 10 மணிக்கும் ஓவியம், நாட்டுப்புற நடனப் போட்டிகள் மதியம் 2 மணிக்கும் நடைபெறும். இப்போட்டிகள் 5 – 8, 9-12 மற்றும் 13-16 என்ற வயது பிரிவுகளில் நடைபெறும்.

**போட்டி நடைபெறும் இடம்** **மண்டலக் கலை பண்பாட்டு மையம்,**
**மாவட்ட அரசு இசைப் பள்ளி வளாகம்,**
**சதாவரம், ( காது கேளாதோர் பள்ளி அருகில் )**
**காஞ்சிபுரம்.**
**தொலைபேசி .044–27290735, 27268190.**

**போட்டி விதிகள்**

**குரலிசை (வாய்ப்பாட்டு) காலை 10.00 மணி**

மாணவ / மாணவியர் தனியாக குரலிசை பாட வேண்டும். ஒவ்வொருவருக்கும் அதிகபட்சமாக ஐந்து நிமிடம் அனுமதிக்கப்படும். இசையை முறையாக பயின்றவர்கள் இப்போட்டியில் பங்கேற்கலாம். போட்டியில் தமிழ் பாடல்கள் /கர்நாடக இசைப்பாடல்கள்/ தேசபக்திப்பாடல்கள் பாட வேண்டும். திரைப்படப்பாடல்கள் அனுமதியில்லை.

**பரதநாட்டியப்போட்டி - காலை 10.00 மணி**

பரதநாட்டியம் முறையாகப் பயில்வோர் இப் போட்டியில் பங்கேற்கலாம். முழு ஒப்பனை மற்றும் உரிய உடைகளுடன் நடனம் இருத்தல் வேண்டும். ஒவ்வொருவருக்கும் அதிகபட்சமாக ஐந்து நிமிடம் அனுமதிக்கப்படும். குழு நடனங்கள் அனுமதியில்லை. பக்க வாத்தியங்களையோ, ஒலி நாடாக்களையோ/ குறுந்தகடுகளையோ பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றை போட்டியில் பங்கேற்பவர்களே அதற்கான கருவிகளை ( Smart Phone/ Mobile) ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும்.

**நாட்டுப்புற நடனம் ( பிற்பகல் 2.00 மணி)**

ஒவ்வொருவருக்கும் அதிகபட்சமாக ஐந்து நிமிடம் அனுமதிக்கப்படும். முழு ஒப்பனை மற்றும் உரிய உடைகளுடன் நடனம் இருத்தல் வேண்டும். குழு நடனங்கள் அனுமதியில்லை. பக்க வாத்தியங்களையோ, ஒலி நாடாக்களையோ/ குறுந்தகடுகளையோ பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றை போட்டியில் பங்கேற்பவர்களே அதற்கான கருவிகளை (Smart Phone/ Mobile) ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும்.

**ஓவியம் ( பிற்பகல் 2.00 மணி)**

40 x 30 செ.மீ அளவுள்ள ஓவியத் தாள்களையே பயன்படுத்தவேண்டும். பென்சில்,கிரையான் வண்ணங்கள், போஸ்டர் கலர் , வாட்டர் கலர் பெயிண்டிங் என எவ்வகையிலும் ஓவியங்கள் அமையலாம். ஓவியத்தாள் , வண்ணங்கள், தூரிகைகள் உட்பட தங்களுக்குத் தேவையானவற்றைப் போட்டியாளர்களே கொண்டு வருதல் வேண்டும். தலைப்புகள் போட்டி தொடங்கும்போது அறிவிக்கப்படும்.

போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் தத்தம் பள்ளிகளிலிருந்து பிறந்த தேதி/ வயதிற்கான சான்றினை ( Bonafide Certifcate) எடுத்து வர வேண்டும். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு விவரங்கள் தொலைபேசியில் தெரிவிக்கப்படும். மேலும் இம்மாவட்ட போட்டிகளில் முதல் , இரண்டாம், மூன்றாம் பரிசு வென்றவர்களுக்கு பின்னர் நடைபெறும் விழாவில் பரிசுகள் வழங்கப்படும். இம்மாவட்ட போட்டிகளில் 9- 12, 13- 16 வயதுப் பிரிவுகளில் முதல் பரிசு பெறும் சிறார்கள் மாநில போட்டிக்கு அரசு சார்பில் அனுப்பிவைக்கப்படுவார்கள்.

**மாவட்ட கலைப் போட்டிகள் நடைபெறுமிடம்** **மண்டலக் கலை பண்பாட்டு மையம்,**
**மாவட்ட அரசு இசைப் பள்ளி வளாகம்,**
**சதாவரம்,**
**(காது கேளாதோர் பள்ளி அருகில் )**
**காஞ்சிபுரம்.**
**தொலைபேசி .044–27290735/ 27268190**

**நாள்:** **05.02.2018 திங்கள் கிழமை**

| வ.எண் | கலைப்பிரிவு | நேரம் |
|---|---|---|
| 1 | குரலிசை, பரத நாட்டியம் | காலை 10.00 மணி |
| 2 | நாட்டுப்புற நடனம், ஓவியம் | பிற்பகல் 2.00 மணி |

**செய்தி வெளியீடு,**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**

**காஞ்சிபுரம்.**